# மக்கள் மறு வாழ்வு

எங்கெங்கும்
அன்னியம்
ஆக்கப்பட்டவர்கள்
விவரம்
உள்ளே....

மலர்: 2] ∵ ஆகஸ்டு 1984 ∵ விலை 75 காசு ∵ [இதழ்: 12


## தாயகம் திரும்பியோர் வங்கி பிரதிநிதித்துவ பேரவை

# சார்பாளர்கள் தேர்தல்

தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியின் பிரதிநிதிகள் பேரவைக்கு சார்பாளர்கள் (டெலிகேட்டுகள் தெரிவு செய்யும் தேர்தல் எதிர்வரும் ஆகஸ்ட் 20 ந் தேதி நடைபெற விருக்கிறது இதற்கான நியமனத்தாக்கல் ஜூலை 6 ந் தேதி முடிந்தது நியமனத்தின் போதே பலர் போட்டியின்றி தெரிவாயினர். திருச்சி மதுரை, சேலம் ஆகிய தொகுதிகளில் மட்டுமே பலத்தபோட்டியில் சார்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட விருக்கிறார்கள்.

தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி மற்றும் வளர்ச்சி வங்கி பர்மா, இலங்கை, வியட்நாம் ஆகிய நாடுகளிலிருந்து வந்த அகதிகளுக்காகவே இயங்கி வருகிறது இதில் தாயகம் திரும்பியோரே பங்காளர்களாக (அங்கத்தவராக) இருக்கிறார்கள் கூட்டுறவு வங்கியாகிய இதன் அங்கத்தவர்கள் மத்தியிலிருந்து பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவர்கள் அடங்கிய பேரவையிலிருந்து ஒரு இயக்குனர் தேர்ந்தெடுக்கப்படுவார். இவர்,வங்கியின் இயக்குனர் குழுவில் (டைரக்டர் போர்ட்) இருந்து தாயகம் திரும்பியோர் நலன்களை கவனிப்பார் என்பது அனைவரும் அறிந்ததே

இப்போது நடைபெறுவது 4 வது பிரதிநிதிகள் பேரவைக்கான சார்பாளர் தேர்தலாகும்.

இத்தேர்தலுக்கு, தமிழ்நாட்டில் சென்னை, செங்கல்பட்டு, வடாற்காடு, தென்னாற்காடு, சேலம் தர்மபுரி, பெரியார், கோவை, மதுரை ராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி, திருச்சி, தஞ்சை புதுக்கோட்டை மாவட்டங்களில் மற்றும் ஆந்திரா, கர்னாடகா, கேரளா ஆகிய மாநிலங்களில் வசிக்கும் அல்லது தொழில் செய்யும் வங்கி அங்கத்தவர்கள் வாக்களிப்பார்கள்.

வடசென்னை (1) தொகுதிக்கு1 , வடசென்னை 2)க்கு 14, தென்சென்னைக்கு 1 , செங்கற்பட்டுக்கு 6, வடாற்காட்டிற்கு 6, தென்னாற்காட்டிற்கு 6, சேலத்திற்கு 5, தர்மபுரிக்கு 1, பெரியாருக்கு 2, கோவைக்கு 4, நீலகிரிக்கு 1, மதுரைக்கு 5, ராமநாதபுரத்திற்கு 11, நெல்லைக்கு 6, கன்னியாகுமரிக்கு 1, திருச்சிக்கு 17, தஞ்சாவூருக்கு 8, புதுக்கோட்டைக்கு 3, கர்னாடக மாநிலத்திற்கு 8, கேரளாவுக்கு 1, ஆந்திராவுக்கு 19என்று சார்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

தெரிவு செய்யப்பட வேண்டிய தொகைக்கு அதிகப்படியாகாமலும், சரிக்கு சமனாகவும், அதற்கு குறைவாகவும் பல தொகுதிகளில் வேட்பாளருக்குமனுசெய்யப்பட்டுள்ளன. இந்த இடங்களில் எல்லாம் போட்டி இட்டு வாக்குபெற வேண்டில்லை அந்த இடங்களில் மனு செய்த வேட்பாளர்கள் வாக்கு போடாமலே, போட்டியின்றி சார்பாளர்களாவார்கள்.

இந்த தேர்தலில்பல இடங்களில் போட்டியின்றி பலர் சார்பாளர்களாயியுள்ளார்கள்.

நீலகிரி பெரியார், தர்மபுரி ஆகிய தொகுதிக்ளில் மட்டும் யாருமே வேட்பாளர்களாக மனுதாக்கல் செய்யவில்லை. சில தொகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய சார்பாளர்களுக்கும் குறைவாகவே வேட்பாளர்கள் மனு

[12-ம் பக்கம் பார்க்க]

## திருச்சி நகரத் தந்தை லூர்துசாமிபிள்ளை மறைவு

திருச்சி நகரத்தந்தை என்று போற்றப்பட்டு வந்த திரு.ஏ எஸ்.ஜி. லூர்துசாமிப்பிள்ளை அவர்கள் சமீபத்தில் இயற்கையெய்தினார்.

லூர்துசாமிபிள்ளை அவர்கள் பல வருடங்கள் திருச்சி நகரசபை கவுன்சிலராகவும், தலைவராகவும் இருந்து பல சேவைகளைசெய்துள்ளார்கள்

பர்மா தமிழர்கள் வியாபாரம் செய்துப் பிழைப்பதற்கு திருச்சிநகரில் நடைப்பாதையில் (பெட்டி) கடைகள் வைத்துக் கொள்ள அனுமதிப்பது என்ற தீர்மானத்தை நகரசபை கூட்டத்தில் கொண்டு வந்து நிறைவேற்றியதோடு, கடல்கடந்து அகதிகளாக வந்த பர்மா தமிழர்களுக்கு பலவகையில் உதவிகள் புரிந்து சேவையாற்றியவர் என்ற வகையில் அவர் பர்மியத் தமிழர்கள் நெஞ்சில் அழியாத இடம்பெற்றவர்.

தாயகம் திரும்பியோர் சிறு வியாபாரிகள் முன்னேற்ற சங்கம் தாயகம் திரும்பியோர் சார்பில் தனது அனுதாபத்தை அண்ணாரில் குடும்பத்தாருக்கு தெரிவிப்பதோடு என்றும் மறக்க முடியாத அவரது சேவையை அவரது புதல்வர்களான திருவாளர்கள் அடைக்கலராஜ், ஞானராஜ், இருதயராஜ், பால்ராஜ் ஆகியோர் தொடர்ந்து செய்திட வேண்டுமென 'மக்கள் மறு வாழ்வு' மூலமாக தெரிவிக்கின்றனர்.

# மக்கள் மறுவாழ்வு

மலர்: 2] ஆகஸ்டு '84 [இதழ்: 12


## கண்டியிலுள்ள துணை தூதரகத்தின் மறுவாழ்வுப் பிரிவின் கடமை

இலங்கையிலிருந்து திரும்பி அனுப்பப்படும் மக்களுக்கு மறுவாழ்வு உதவிகான சிபார்சுகளை கண்டிலுள்ள இந்திய துணைத் தூதுவரகம் செய்து அனுப்புகிறது. சிபார்சு செய்வதோடு மாத்திரமல்ல; இந்நாட்டின் நிலைமைக்கேற்ப அவர்களுக்கு உரிய யோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கி அனுப்ப வேண்டியது அதன் கடமையாகும்.

ஆனுல் அப்படி ஏதும் செய்வதாக நமக்குப்படவில்லை; இங்கு வருவோர்கள் முன்னேற்பாடாக செய்ய வேண்டியதை செய்யாமல் வந்து அவஸ்தை படுவதிலிருந்து தெளிவாக புரிகிறது—அது மட்டுமல்ல; ஏனேதானே வென்று சொல்லி அனுப்பி விடுவதாகவும் தெரிகிறது. இதை வருகிறவர்களின் வார்த்தைகளிலிருந்து புரிந்துகொள்ள முடிகிறது; அவர்கள் இங்கு வந்து படும் சிரமங்கள். துன்பங்களிலிருந்தும் இதை தெளிவாக புரிந்து கொள்ளலாம்.

இந்த நாட்டின் சட்டத்திட்டங்கள், உதவிகள் சலுகைகள் குறித்தும் விளக்கங்கள் கொடுக்க வேண்டியதும் அதற்கேற்ப அவர்களுக்கு தகுந்த உதவிக்கு சிபார்சு செய்ய வேண்டியதும் துணைத்தூதுவரகத்தின் மறுவாழ்வு பகுதியின் கடமை.

உதாரணத்திற்கு சாதிகள், சாதிகளுக்கு ஏற்ப அளிக்கப்படும் உதவிகள் குறித்து விளக்கங்கள் கொடுக்கலாம்-சாதிச் சான்றிதழையும் அங்கேயே வழங்கலாம்

அங்கிருந்து வருவோரை பொருத்தவரை சாதிகள் பற்றிய 'அக்கறை'யில்லாதவர்களாக-இந்தியாவில் அதற்கேற்ப சலுகைகள், உதவிகள் இருப்பது தெரியாதவர் இருக்கிருர்கள்.

மறுவாழ்வுக்கான குடும்ப அட்டையில் ஜாதி என்று குறிப்பிடப்படும் இடத்தில் எதுவும் எழுதுவதில்லை; துணைத்தூதரக அதிகாரிகளும் இதைக் கவனிப்பதில்லை ஆனுல் இங்கு அந்த சான்றிதழுக்காக அலையும் நிலைமை இருக்கிறது.

அது மட்டுமல்ல அகதிகள் சான்றிதழ்கள் பெறுவதிலும் பல தொல்லைகள் இருக்கிறது. கடவுச்சீட்டையும், குடும்ப அட்டையையும் மறுவாழ்வு உதவிக்காக ஏதாவது ஒரு அலுவலகத்தில் ஒப்படைத்து விட்டால் பின் உரிய நேரத்தில் அதை பெறமுடிவதில்லை. அது இல்லாமலும் அகதிகள் சான்றிதழ் பெற முடிவதில்லை.

ஆதலால் இது போன்ற விடயங்களில் முன்யோசனையாக உரிய சான்றிதழ்கள் அங்கிருந்தே வழங்க வேண்டும் என்பதோடு, தகுந்த அறிவுரை யோசனைகள் கூறி அனுப்ப வேண்டியது துணை தூதுவரகத்தின் கடமையாகும். O

## ஜே. ஆர். ஜெயவர்த்தனுவுக்கு இலங்கை அகதிகள் கண்டனம்

சமீபத்தில் இலங்கை அதிபர் ஜே. ஆர். ஜயவர்த்தனு டெல்லிக்கு விஜயம் செய்த போது, மண்டபம் - திருச்சி முகாம்களில் இருக்கும் ' 00 அகதிகள் ஊர்வலம் நடத்தி தமது கண்டனத்தை தெரிவித்தனர்.

கடந்த ஜூலை இனக்கல வரத்தால் பாதிக்கப்பட்டு இலங்கையில் இருந்து அகதிகளாக 85,334 பேர்கள் இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ளனர் இவர்கள் 1 66 அகதிகள் மண்டப முகாமில் இருக்கிருர்கள். திருச்சி முகாமில் 454 பேரும் இருக்கிருர்கள். இத்துடன் ஒப்பந்தத்தின் கீழ் வருகிறவர்களும் ஆயிரத்திற்கு மேல் தங்கி இருக்கிருர்கள்.

இப்போதும் இலங்கையில் ஆயிரக்கணக்கான பேர் அகதிகளாக இருக்கிருர்கள். தமிழர்கள் பல வித கொடுமைகளுக்கு பலியாக்கிக் கொண்டு இருக்கிருர்கள். மேலும் தமிழினத்தை ஒழித்துக்கட்ட இஸ்ரேலில் இரகசியத் துறையான மொஸாத்தின் ஆதரவையும் நாடி பயிற்சிக்கு அழைத்து வந்திருக்கிறது. அதுமட்டுமல்ல; பிரிட்டனிலிருந்து ' லிப்படாளத்தையும் அழைத்திருக்கிறது.

இச் செயல்களைக் கண்டிக்கும் வகையில், பல நாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்துவிட்டு (30-6-84) டெல்லிக்கு வந்த இலங்கை ஜனதிபதி ஜெயவர்த்தனுவுக்கு மண்டபம் திருச்சி முகாம்களைச்சேர்ந்த அகதிகள் கண்டனம் தெரிவித்தனர். ஆண்களும், பெண்களும் கருப்பு பட்டை குத்தி தமது எதிர்ப்பைக் காட்டினர்—அமைதியான முறையில் இந்த எதிர்ப்பைக் காட்டக் கூட காவல் துறையினர் தடுத்து நிறுத்த முயற்சி செய்தனர் என்பதும் குறிபிடத்தக்கது.

-செல்வராஜா

## தா. தி. முகாமில் வயிற்றுக்கடுப்பு நோய்

திருச்சி ' கொட்டப்பட்டு தாயகம் திரும்பியோர் முகாமில் இருக்கும் தாயகம் திரும்பியோர் பல வயிற்றுக்கடுப்பு நோயினுல் பாதிக்கப்பட்டிருக்கிருர்கள்.

இலங்கையில் குளிப்பிரதேசத்தில் வசித்து வந்த இவர்களுக்கு இந்நாட்டின் வெப்பம் ஒத்துக் கொள்ளவில்லை இதனுல் வயிற்றுக் கடுப்பு வயிற்றுப் போக்கு ஆகிய நோய்களுக்கு ஆள கிருர்கள்.

## மாத்தூர் பள்ளியில்...

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள மாத்தூர் அகதிகள் உயர்நிலைப்பள்ளியில் பயிலும் தமது பிள்ளைகளுக்குபோதிய வசதி இல்லை என்று பல பெற்ருேர்கள் தெரிவிக்கிருர்கள்.

பல பிள்ளைகள் சிரங்கு வயிற்றுக் கடுப்பு நோயினுல் பாதிக்கப்பட்டு வருகிருர்கள் அனைவரும் போதிய போஷாக்கு இல்லாத காரணத்தால் வளர்ச்சிகுன்றி காணப்படுகிருர்கள் அப்பள்ளியில் தண்ணீர்வசதி மற்றும் சுகாதார வசதிகள் மிகவும் குறைவாக இருக்கிறது.

இதுகுறித்து கேட்ட போது பள்ளி கண்காணிப்பாளர் தெரிவித்த கருத்து—

''நாளொன்று தலா 45 காசுகளே அரசு வழங்குகிறது இதில் சாப்பாட்டோடு, பிள்ளைகளுக்கு வேண்டியசோப்பு எண்ணெய் முதலினவை வழங்க வேண்டும். முடிவெட்டுவதற்கான காண சிலவுகளையெல்லாம் இதிலேதான் பார்த்துக் கொள்ள வேண்டும். இத்தனையும் செய்ய இந்த நிதி யுதவி போதுமா? எங்களால் எதுவும் செய்ய முடியவில்லை இதில் தான் எல்லாவற்றையும் சமாளிக்க வேண்டும் என்கிருர் O

# ஒரு வாசகர் எழுதுகிறார்!

ஆசிரியருக்கு,

நான் என் குடும்பத்துடன் 5-6-84 ல் தாயகம் வந்தேன் அன்று என்னுடைய லக்கேஜ் வரவில்லை அதனால் எங்களை, லக்கேஜ் வரும் வரை மண்டபமுகாமில் தங்கும்படி ராமேஸ்வரத்தில் கூறினார்கள்.

லக்கேஜ் வந்ததும் திருச்சிக்கு அனுப்பினார்கள்.

திருச்சிக்கு வரும்போது 'எங்களை கூட்டி வந்தவர்கள் (மண்டபம் முகாமில் அகதிகளுக்கு அறைகள் ஒதுக்கிக் கொடுப்பவர் அறந்தாங்கிக்கு டிக்கட் எடுத்துக் கொடுத்து காரைக்குடியில் இறங்கி மாறி அறந்தாங்கி ரயிலில் ஏறிப்போ" என்று அனுப்பினார்.

ஆனால் என் கூட வந்தவர்கள் திருச்சியில்தான் அகதிகள் முகாம் இருக்கிறது நீங்கள் அறந்தாங்கி போக வேண்டாம் எங்களுடன் திருச்சிக்குவாருங்கள் என்று திருச்சி முகாமிற்கு அழைத்து வந்தனர்.

மண்டப முகாமின் தனித்துணை ஆட்சியாளர் கடிதம் இல்லாததால் திருச்சிமுகாமில் ஏற்க மறுத்துவிட்டனர். மீண்டும் மறுநாள் நான் மண்டப முகாம் சென்று கடிதம் பெற்றுக் கொண்டு வந்து திருச்சி முகாமில் சேர்ந்தேன்

முதலில் அறந்தாங்கி டிக்கட்டுடன் நான் திருச்சி வந்ததால் அதிகப்படி பணம் செலுத்த வேண்டியதாகி விட்டது, என்னை பயமுறுத்து பணம் மட்டுமல்ல கொண்டு வந்த சோப்பு முதலானவைகளையும் வாங்கிக் கொண்டனர்.

இவ்வளவு நடைபெற்றதற்கு காரணம், மண்டபமுகாம் எனக்கு டிக்கட் எடுத்துக் கொடுத்தவர் என்னிடம் பல சாமான்கள் கேட்டு கொடுக்காததே காரணம். விபரம் புரியாத எனக்கும் பல சங்கடங்கள் ஏற்பட்டு விட்டன எனக்கு வீண் அலைச்சலும் பண விரயமும் ஏற்பட்டு விட்டது.

மறுவாழ்வுப்பகுதியினர் எங்களுக்கு வழிகாட்டி வாழவைப்பதற்காகவே இருப்பவர்கள் இவர்கள் இப்படி நடப்பதா? இன்னும் எத்தனைபேர் இருப்பார்கள். நினைக்கவே பயமாக இருக்கிறது.

இவர்களால் எத்தனை தாயகம் திரும்பியோர் அவதிபட்டு துன்பத்திற்கும் துயரத்திற்கும் ஆளாகி இருப்பார்கள்.

ஏ கருப்பையா

தாயகம் திரும்பியோர் முகாம் திருச்சி-20

## தாயகம் திரும்பியோர் அனைவரும் பயன் பெற

# கூட்டுறவு வங்கிஒன்று ஆரம்பிக்கத்திட்டம்!



இலங்கை பர்மா வியட்நாம் ஆகிய அயல் நாடுகளிலிருந்து திரும்பியுள்ள அனைவரும் பலன் பெறும் வகையில் வங்கி (Repatriates Co-Operative Service Bank) ஒன்றை ஆரம்பிக்க முயற்சிகள்மேற்கொள்ளப்பட்டுள்ளது

தாயகம் திரும்பியோரின் நீண்டநாள் கனவை நனவாக்கும் வகையில் வங்கியின் தாயகம் திரும்பியோர் சார்பு டைரக்டர் எம்.ஆர். லிங்கம் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாக விரைவில் ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருகிறது

25 லட்சம் ரூபாய் மூதலீட்டில் ஆரம்பிக்கப்படவிருக்கும் இவ்வங்கியில், சிறு வியாபாரம் செய்வதற்கான கடனுதவி கிடைக்கும். வீடு, நிலம், நகைகளை அடமானம்வைத்து தங்களுக்குரிய கடன் தொகையை பெறலாம் மற்றைய வர்த்தக வங்கிகளில் இருப்பதுபோல தினசரி சின்னச்சிறுவியாபாரம் செய்ய சிறு கடன்கள் கொடுத்து தினசரி வசூல் செய்தல் போன்று வசதிகள் செய்யப்படும். கூட்டுறவு அடிப்படையில் கடன் பெறலாம்.

18 வயது தாண்டிய தாயகம் திரும்பியோர் அனைவரும் இந்த வங்கியில் அங்கத்தவர்களாகலாம், வாரிசுதாரர்களும் இதில் பயன் அடைவார்கள்.

பர்மாவிலிருந்துதிரும்பியோர் யாரும் இப்போது தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியில் அங்கத்தவம் பெற முடியாது. இலங்கையிலிருந்து வருவோர்களிலும், வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் குறிப்பிட சிலரே சங்கத்தவராகலாம். இந்த குறைகளை தவிப்பதற்கும், தாயகம்திரும்பி நீண்ட காலம் ஆனவர்களும் இந்த வங்கியில் அங்கத்தவராகலாம். இந்த வங்கி முதலில் சென்னையில் துவக்கப்படும். கிளைகள் படிப்படியாக தாயகம் திரும்பியோர் அதிகமாக வாழும் நகர்களில்- ஊர்களில் ஆரம்பிக்கப்படும். O

# வங்கி இயக்குனர் - டெலிகேட்கள்

# தஞ்சை, திருச்சி சுற்றுப்பயணம்

வங்கி இயக்குனர் திரு. M.R லிங்கம் BE மற்றும் டெலிகேட்ஸ் யூனியன் தலைவர் அவி உதயணன் செயலாளர் கவிஞர் வேணுகோபாலன் முன்னாள் செயலாளர் திரு CR சந்திரன், இராணிப் பேட்டை டெலிகேட் S ஆறுமுகம் "மக்கள் மறுவாழ்வு" ஆசிரியர் T.S.ராஜ் ஆகியோரங்கிய குழுவினர் தஞ்சை திருச்சி மாவட்டங்களில் 15-7-80 முதல் 8-7-84 வரை மூன்று நாட்கள் சுற்றுப்பயணம் செய்து தாயகம் திரும்பியோரால் அமைக்கப்படவிருக்கும் Repatriates Co-operative Service Benk தொடர்பான விளக்கங்களை எடுத்துக் கூறினர்.

திருச்சியில் பர்மா பஜார் தலைவர் திரு. முத்துச்சாமி அவர்களும் மற்றும் திருவாசின் வீரையா ஆகியோர் குழுவினர் உடனிருந்துதேவையான உதவிகளைச் செய்தனர். குழுவினர் கொட்டப்பட்டு தாயகம் திரும்பியோர் வரவேற்புமுகாமுக்கு சென்று அங்குள்ள நிலைகளைக்கண்டறிந்து திரும்பினர் அடுத்த தஞ்சைக்கு சென்று தஞ்சையில் தாயகம் திரும்பியோருக்காக செயல் பட்டு வரும் டெலிகேட் திரு MK வலம்புரி திரு வீ. கருப்பையா R. சுப்பிரமணி ஆகியோரின் ஒத்துழைப்புடன் குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலைக்குச் சென்று அங்குள்ள தாயகம் திரும்பியோர் குடியிருப்பைச் சுற்றுப்பார்த்து அவர்கள் கோரிக்கையான குடியிருப்பில் கோயில்கட்டு

(10-ம் பக்கம் பார்க்க)

# திட்டங்களை செயல்படுத்துவதில் காட்டும் அலட்சியமும் அக்கறையின்மையுமே வழங்கும் மறுவாழ்வு உதவிகளை மறுப்பதற்கு காரணம்!

எங்களுக்கு கண்டியில் மறு வாழ்வு உதவிக்கு சிபார்சு செய்யப்பட்ட போது தமிழ் நாட்டில் பால்பண்ணை திட்டத்தில் மாதம் ரூபா 250 சம்பாரத்தில் வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்று தெரிவித்தார்கள்.

நாங்கள் திருச்சி கொட்டப்பட்டு முகாமிற்கு வந்தபின் எங்களை சேலம் மாவட்டம் திருச்செங்கோடு கைலாசபாளையத்திலுள்ள பால் பண்ணை திட்டத்திற்கு போகும்படி கூறினார்கள். இத் திட்டத்திற்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ள தாயகம் திரும்பியவர்களின் நிலைமையை நேரில் தெரிந்து வருவதற்கு நாங்கள் சிலர் அங்கு சென்று பார்த்தோம் அங்கே குடியமர்த்தப்பட்டுள்ள குடும்பங்கள், அங்கு எந்த வித வசதியும் இல்லாத தற்காலிக குடிசைகளில் வசித்துக்கொண்டிருக்கிறார்கள் அங்கு குடிநீர் கிடைப்பது மிக மிக அரிது. அத்துடன் மாடு வளர்ப்புக்கு தேவையான அடிப்படை வசதிகள் எதுவுமே அங்கு இல்லை.

அவர்கள் அங்கு அனுப்பப்பட்டு மூன்று மாதங்களுக்கு மேல் ஆகியும் அவர்களுக்கு மாடுகள் பிடித்துக் கொடுக்கப்படவும் இல்லை. எத்தவிதமான வருவாயும் இல்லாமல் அவர்கள் சாப்பாட்டிற்கே மிகவும் சிரமப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள் அங்கு சென்ற சிலர் பட்டினியிலும், நோயினாலும் இறந்து விட்டதாகவும் அறிந்தோம்.

இந்த நிலையில் எங்களை இதே திட்டத்திற்கு போகும் படி அறிவித்துள்ளார்கள் அங்கு எங்கள் குடும்பங்களை அழைத்துச் சென்றால் எங்களுக்கும் இதே நிலை தான் ஏற்படும் என அஞ்சுகிறோம் அரசு எங்களுக்கு வழங்கியுள்ள திட்டத்தை எதிர்க்கவில்லை. நாங்கள் மேலே சொன்ன குறைகள் நிவர்த்தி செய்யப்படாத நிலையில் அங்கு செல்லத் தயங்குகிறோம்'

பால்பண்ணைத் திட்டத்திற்கு சிபார்சு செய்யப்பட்டு, திருச்சி கொட்டப்பட்டு முகாமில் தங்கியிருக்கும் சில 'தாயகம் திரும்பியோர்' மேற்படி புகார்களுடன் 'மக்கள் மறுவாழ்வு' அலுவலகத்திற்கு வந்து தமது கருத்துகளைத் தெரிவித்தனர்.

அவர்களிடம் இத்திட்டம்-வேலை வாய்ப்பு குறித்து விளக்கம் கோரியபோது அவர்களால் தகுந்த விளக்கங்கள் கொடுக்க முடியவில்லை அந்த திட்டம் பற்றியும் அவர்களுக்கு சரிவர தெரியவில்லை.

## சிறப்பான திட்டம்

இந்த திட்டம் குறித்து சம்பந்தப்பட்டவர்களை சந்தித்து அறிய முற்பட்டோம்.

சேலத்தில் மறுவாழ்வுத் துறையின் தனித்துணை ஆட்சியாளர், கனிக்துணை தாசில்தார் ஆகியோர்களை சந்தித்து விளக்கம் பெற முயன்றோம். முடியவில்லை ஆயினும் சம்பந்தப்பட்டவர்கள் மூலம் சில தகவல்கள் கிடைத்தது.

தாயகம் திரும்புகிற மக்களுக் கன்றே சேலம் மாவட்டத்தில் பல இடங்களில் இப் பால் பண்ணைத்திட்டம் செயல் படுத்தப்பட விருக்கிறது.

சேலம் மாவட்டத்தில், ஆத்தூர், திருச்செங்கோடு கைலாசப்பாளையம், ஆட்டுப்பாளையம், தாரமங்கலம் தசவிலக்கு கிராமம், ஆண்டிப்பட்டி முதலான இடங்களில் இப்பண்ணைகளை செயல்படுத்தத் திட்டமுண்டு.

இவ்விடங்களில் இப்பால் பண்ணை திட்டத்தை மட்டும் செயல்படுத்தாமல், பிற வேலை வாய்ப்புக்கான துணை வேலைத் திட்டங்களையும் செயல்படுத்த இருக்கிறது. தீப்பெட்டித் தயாரித்தல், பட்டு பூச்சி வளர்த்தல், கயிறு திரித்தல், அம்பர் சர்க்கார் மூலம் நூல் நூற்றல் முதலானவைகளே அத்துணை வேலை வாய்ப்பு திட்டங்களாகும்.

இதன் மூலம் ஒவ்வொரு குடும்பத்திலுள்ள பிறரும் வேலை பெறவும், ஊதியம் பெறவும் வாய்ப்பேற்படுத்தித் தரப்படும்.

## பால் பண்ணைத் திட்டம்

"இத்திட்டம் நல்ல திட்டம் இந்த நாட்டிற்கு ஏற்றதும், தாயகம் திரும்பியோர் தகுந்த மறுவாழ்வினைப்பெற்று சுபீட்சமடைவதற்கும் பொருத்தமானது இது" என்று தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியின் பிரதிநிதித்துவ பேரவையின் சேலம் தொகுதியின் சார்பாளர்களில் ஒருவரான திரு. சிவசண்முகநாதன் சில விளக்கமளித்தார்.

இத்திட்டத்தில் அமர்த்தப்படும் தாயகம் திரும்பியோர்களுக்கு வணிகக்கடன் ரூபா 5000 மும் வழங்கப்படுகிறது இந்ததொகை உரிய வங்கியில் போடப்படும் ஏழாண்டுகளுக்கு எடுக்காத வகையில் பிக்சட் டிபாசிட்டில் போடப்படுகிறது ஏழாண்டுகளில் இது ரூபா பத்தாயிரமாக கிடைக்கும். மேலும் ரூபா 1000 பால பண்ணைக்கான பட்டி கட்டிக் கொள்ள வழங்கப்படுகிறது இவர்கள் மாடு வாங்குவதற்கான கடனை கனரா வங்கி வழங்குகிறது முதலில் ஒரு மாடும், பின்னர் படிப்படியாக மூன்று மாடுகள் வரை வாங்குவதற்கான கடனும் வழங்கும். மாடுகளுக்கான தீவனத்தையும் வங்கியே முன்னின்று வழங்கும் கூட்டுறவு பால் சேகரிப்பாளர் சங்கத்தினர் பாலை பெற்றுக்கொள்வார்கள் தீவனத்திற்குரிய போக மிகுதி தொகை இவர்களுக்குகிடைத்து வரும். கடன் செலுத்தி முடிந்ததும், மாடுகள் சொந்த மாவதோடு, முழுப்பலனையும் பெற்றுக் கொள்வர்.

இந்த திட்டத்தில் வழங்கப்படும் இன்னொரு சலுகை, மாடுகளுக்காக கொடுக்கப்படும் கடனில் பாதித்தொகை மானியமாகிவிடும். பாதித் தொகையே திருப்தி செலுத்த வேண்டிய கடன். மானியம் கிராம வளர்ச்சி [I.R.D.P] திட்டத்தின்கீழ் மானியமாக வழங்கப்படுகிறது.

மாடுகளை தாயகம் திரும்பியோர் விரும்பினால் தாமே பிடித்துக் கொள்ளலாம். அல்லது சம்பந்தப்பட்ட அலுவலர்கள்-வங்கி அலுவலர், ஊராட்சியின் பிளாக் டெவலப்மண்ட் ஆபீஸர், மிருக வைத்தியர் முன்னின்று ஏற்பாடு செய்வர்.

## திட்டம் செயல்படவில்லை?

இத்தகு திட்டத்தை நினைத்துக் கொண்டு அத்திட்டத்தில் அமர்த்தப்பட்டுள்ள 'தாயகம் திரும்பியோரை' சென்று பார்த்தபோது நமது அதிர்ச்சியும் வருத்தமுமே ஏற்பட்டது.

திருச்செங்கோடுக்கு அருகே முனியப்ப கோவில், சாலப்பாளையம் கிராமத்தில் குடியமர்த்தப் பட்டிருந்த தாயகம் திரும்பியோர் 14 குடும்பங்களை சென்று பார்த்தோம்.

ஜனவரி மாதம் 18-ம் தேதி இங்கு வந்த இவர்களுக்கு என்று இன்னும் எதுவுமே

(11-ம் பக்கம் பார்க்க)

## "உண்ணும் உணவைத் தட்டிப் பறிக்க வரவில்லை-கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுக"

# இலங்கைத் தாயகம் திரும்பியோர் சங்கம் போராட முடிவு!

செய்ய மறுக்கும் உதவிகளைக் கேட்டு உண்ணாவிரதம் இருக்க கொடைக்கானலில் குடியேறி வாழும் தாயகம் திரும்பிய பெருந் தொகையினரான மக்கள் உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்துள்ளனர்.

8 .7.84 அன்று ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் இருக்கும் இத் தாயகம் திரும்பியோர் சிலோன் ரிபெட்ரியேட்ஸ் அசோஷிசனில் அங்கம் வகிக்கின்றனர்.

இவ்வமைப்பு தாயகம் திரும்பியோர் பல பிரச்சினை குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுத்தது.

ஏதற்குமே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் இது குறித்து கொடைக்கானல் துணை தாசில்தாரிடம் பேசச் சென்ற இச்சங்கத்தின் தலைவரை அவமதித்தாகவும் சங்கம் தெரிவித்துள்ளது. இது குறித்து உயர்மட்ட அதிகாரிகளுக்கு புகார் செய்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மெத்தனம் காட்டுவதால் மேற்படி ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்துள்ளனர்.

இது குறித்து கொடைக்கானல் தாசில்தாருக்கு சங்கச் செயலாளர் திரு எஸ். செபஸ்டியன் எழுதியுள்ள கடிதம் வருமாறு -

"இரு விஷயங்களிலும் தாங்கள் மவுனம் சாதிப்பதைக் குறித்து வருந்துகிறோம். தாங்கள் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை-பதிலுமில்லை.

அகதிகளின் குறைபாடுகள் தொடர்பாக சொல்லப்படுகிற முதல் பிரச்சனை குறித்து 24- -84 தொடக்கம் நேரடி நடவடிக்கையிலிறங்க விருக்கிறோம். நடவடிக்கை எடுபடாட்டால் உண்ணாவிரதம் மேற்கொள்வதாகவும் எச்சரித்ள்ளோம். இதுவரை பதில் இல்லாததைக் குறித்து வருந்துகிறோம்.

தணைத் தாதில்தார் மீது உரிய நடவடிக்கையை தாங்கள் மேற்கொள்வீர்கள் என்று எதிர்பார்த்தே தங்களுக்கு மனு செய்தோம். பிரச்சினை குறித்து தாங்கள் அசிரத்தை கொள்வதாகவே உணர்கிறோம்.

நாம் பின்வரும் நடவடிக்கையை மேற்கொள்ள விருக்கிறோம்.

தொழில் குடியிருப்பு வசதிகளில்லாத நிலையில் நாம் அவதியுறுவதால் தங்கள் அலுவலக முன் உண்ணாவிரதம் மேற்கொள்ளப்படும்.

பிரச்சினைகள் தொடர்பான எங்களது கோரிக்கைகளுக்கு மௌனம் சாதிப்பதைக் கண்டித்து ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்ளப்படும் தொடர்ந்தும் கோரிக்கைகள் கவனிக்கப்படாவிட்டால் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொள்வோம். அவல நிலையில் வாழ்வதைவிட சாவதே மேல் என்று எண்ணுகிறோம்.

எங்கள் பிரச்சினைகளை தாங்கள் அனுதாபத்தோடு கவனிக்க வேண்டும் என்பதற்காக சில தகவல்களை தருகிறோம்.

இலங்கையில் தோட்டத்தொழிலில் ஈடுபட்டிருந்த நாங்கள் அந்நாட்டின் வருமானத்தில் 65%. நாமே ஈட்டின் கொடுத்துளோம். எங்களில் 6 லட்சம் பேர்களை அழைத்தக் கொள்வதாகக் இந்திய அரசு இலங்கையுடன் உடன்பாடு செய்து கொண்டது. நாங்கள் கவரப்படல் வேண்டும் என்பதற்காக இந்த மறுவாழ்வு வளிப்புதிட்டங்கள் வெளியிடப்பட்டது. அவைகளில் சில :-

விவசாயத்தில் ஈடுபடுவோர்ருக்கு நிலம், வீடு கடன் உதவிகளுக்கு உத்தரவாதம் கொடுக்கப்பட்டது முதல் அறுவடை வரைக்கும் 6 மாத காலத்திற்கு மானியமாக பண உதவி என்று அறிவிக்கப்பட்டது.

தொழில் வேண்டுவோருக்கு தொழில் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டது.

வியாபாரக் கடன் தரப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது.

ஒவ்வொரு குடும்பத்திற்கு வீட்டு வசதி செய்து தரப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இளைஞர்களுக்கு தொழில் நுட்ப பயிற்சி பற்றி சொல்லப்பட்டது.

அனைத்து குழந்தைகளுக்கும் கல்வி வசதி செய்யப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது,

நீங்கள் எங்களை ஏமாற்றி விட்டீர்கள். நீங்கள் நினைப்பதைப்போல் உண்ணுகிற உணவை தட்டிப்பறிக்க வரவில்லை நாங்கள்.

இந்திய அரசு வாக்குறுதியை காப்பாற்ற வேண்டும். பிரச்சினைகள் அனுதாபத்துடன் கவனிக்கபடாத போது தான் சிக்கல்கள் தோன்றுகின்றன. நீங்கள் யுவைகளை தொல்லையாக கருதினால் அரசுக்கு அறிவியுங்கள். ரவுடிகள் என்றும் நாய்-பேய்கள் என்றும் ஏன் எங்கள் திட்ட வேண்டும். இதனால் பிரச்சினைகள் தீருமா? என்று தெரிவித்துள்ளது. ப


ஹைதராபாத்
ரியல் எஸ்டேட்
[Hyderabad Real Estate]
(வாணப்பட்டரை தெரு, மாரியம்மன் கோவில் எதிரில்)

நெ. 109, வாணப்பட்டரைத் தெரு,
தெப்பக்குளம்,
திருச்சிராப்பள்ளி-620 002.

வீடு, மனைகள், கடைகள்,
நிலங்கள், பங்களா,
வாங்க-விற்க உடனே அணுகவும்!

நம்பிக்கை நாணயத்தோடு செயல்படும்
எங்கள் நிறுவனம் உங்களை அன்புடன்
வரவேற்கிறது.

M. E. ஜமால் முகம்மது

# இந்தியாவில் தொழில் சங்க வளர்ச்சி!

(சென்ற இதழ் தொடர்ச்சி)

1946 நவம்பர் மாதத்தில் தனது தலைமையை ஏற்றுக்கொண்ட எல்லாத் தொழிற் சங்கவாதிகளையும் அ.இ.தொ.ச.கவுடன் இணையுமாறு வேண்டுகோள் விடப்பட்டது. இது நிறைவேறுமற் போகவே 1947 மே 3ம் நாள் டெல்லியில் சர்தார் வல்லபாய் பட்டேல் தலைமையில் நடந்த மாநாட்டில் இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் பிறந்தது. விரைவில் 1948ல் அதிகப் பிரதிநிதித்துவம் கொண்ட தொழிலாளர் அமைப்பாக அங்கிகாரம் பெற்றது.

இந்திய சோஷலிஸ்ட் கட்சி அமைக்கப்பட்டதும் ஹிந்து மஸ்தூர் சபா (H.M.S) என்ற அமைப்பு 1948ல் அமைக்கப்பட்டது இத்துடன் ராயின் ஆதரவாளர்களால் அமைக்கப்பட்ட இந்திய தொழிலாளர்சம்மேளனம் இணைந்தது.

1949ல் கல்கத்தாவில் பேராசிரியர் கே.டி.ஷா, மிருணாள் காந்தி, போஸ் ஆகியவரால் ஐக்கிய தொழிற் சங்க காங்கிரஸ் அமைக்கப்பட இதில் H.M.S, அ.இ.தொ.ச.காவிலிருந்து பிரிந்தவர்கள் சேர்ந்தனர் தற்போது சர்வதேச மகாநாடுகளில் பங்கு பெறவும், பிற ஆலோசனைகளுக்கும், அரசு அகில இந்திய தொழிற் சங்க காங்கிரஸ் (A.I.T.U.C) இந்திய தேசிய தொழிற் சங்க காங்கிரஸ் (I.N.T.U.C) இந்து மஸ்தூர்சபா(H.M.S) ஐக்கிய தொழிற் சங்க காங்கிரஸ் (UTUC) ஆகிய நான்கு அமைப்புகளை அங்கீகரித்துள்ளது.

அனைத்துலக அமைப்புகளுடன் இணை தலைப் பொறுத்தமட்டில் AITUC யும், UTUC தயும் 1945ல் அமைக்கப்பட்ட கம்யூனிச நாடுகளால் ஆதரிக்கப்படும் உலக தொழிற் சங்க சம்மேளனத்(W.F.T.U)துடன் இணைக்கப்பட்டுள்ளன இ.தே.தொ.ச.காவும் ஹிந்து மஸ்தூர் சபாவும் 1949ல் அமைக்கப்பட்ட கம்யூனிஸ்ட் அல்லாத நாடுகளால் ஆதரிக்கப்படும் சர்வதேச சுதந்திரத் தொழிற் சங்கங்களின் கூட்டமைப்புடன் (I. C. F. T. U) இணைக்கப்பட்டுள்ளன.

இந்த நான்கோடு 1955ல் ஜனசங்கக்கட்சியினால் அமைக்கப்பட்ட பாரதிய மஸ்தூர் சங்கம் (B.M.S) 1965 ல் சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சியின் ஹிந்த மஸ்தூர் பஞ்சாயத்து கம்யூனிஸ்ட் கட்சியின் பிளவுக்குப்பின் 970 ல் அகில இந்திய பொதுவுடைமைக் கட்சி (C.P.I.)யிடமிருந்து பிரிந்து இந்திய தொழிற் சங்க மையம் [CITU] 1971ல் இந்திய தேசிய தொழிற் சங்க காங்கிரஸிலிருந்து பிரிந்த தேசிய தொழிலாளர் அமைப்பு ஆகியன குறிப்பிடத்தக்கன. மத்திய மாநில அளவில் அங்கீகாரம் வேண்டுமென இச்சங்கங்கள் கோரி வருகின்றன.

தொழிற்சங்கம் அல்லது அதிகாரிகளின் அமைப்பின் நடவடிக்கைகள் கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்துள்ளது. ஏர் இந்திய வேலை நிறுத்தம், இரெயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தம், சமீபகாலங்களில் பொதுத் துறை நிறுவன ஊழியர்கள் வேலை நிறுத்தம், பம்பாய் பஞ்சாலைத் தொழிலாளர் வேலை நிறுத்தம், துறைமுக மற்றும் சரக்கு தொழிலாளர் வேலை நிறுத்தம் என்பன தொழிற்சங்க இயக்கம் நாட்டில் பரந்த அளவில் பரவியுள்ளது என்பதற்கான உதாரணங்களாகும். ஊதியம் பெறும் ஊழியர்கள் அமைப்பினை மிகப் பெரிய அளவில் வங்கி ஊழியரே ஆரம்பித்தனர் தொடர்ந்து இன்சூரன்ஸ் ஊழியர்கள் நகராட்சி போன்ற உள்ளாட்சித்துறைஊழியர்கள் முதலானோர். தொடக்க நிலையிலிருந்து பல்கலைக் கழகம் வரை எல்லா நிலைகளிலும் உள்ள ஆசிரியர்கள் கூட அமைப்பு ரீதியாக திரண்டுள்ளனர். அரசு ஊழியரும் இதற்கு விலக்கல்ல. மத்திய அரசூழியருக்கு ஒரு கூட்டமைப்பும், மாநில அமைப்புகளும் உள. அண்மையில் இம்மாநில அமைப்புகள் ஒரு தேசிய சம்மேளனத்தில் ஒன்றிணைத்துள்ளன. இவை தவிர உழைக்கும் பத்திரிகையாளர் சம்மேளனம், இந்திய இரெயில்வேமென் தேசிய சம்மேளனம் அகில இந்திய துறைமுகம் மற்றும் சரக்கு தொழிலாளர் சம்மேளனம், அ.இ சுரங்கத் தொழிலாளர் சம்மேளனம், பாதுகாப்பு ஊழியர்கள் தேசிய சம்மேளனம் அ.இ.சிமெண்ட் ஊழியர் சம்மேளனம் போன்றவை அ.இ சம்மேளனங்களில் சிலவாகும்.

சில உள்ளூர் சங்கங்களான டாடா தொழிலாளர் சங்கம் ஜாம்ஜெட்பூர் கெமிகல் மஸ்தூர் சபா, பம்பாய் இன்சீனியரிங் மஸ்தூர் சபா, ஹௌரா, மற்றும் மாநில கட்சிகளின் தொழிலாளர் அமைப்புகள் என்பனவும்குறிப்பிடத்தக்கன.

தற்போது இந்தியாவில் அரசே 30 தனிப்பட்ட பெரிய நிர்வாகியாக உள்ளது பொருட்கள் சேவைகள் உற்பத்தியில் அரசு நடுவராக இல்லாமல் நிர்வாக தொழிலாள உறவுக்கு நேரடிசம்பந்தமுள்ளவராகவும் ஊழியர்கள் அரசு ஊழியர்களாகவும் இருப்பதால் இவ்வுறவின் மூலம் வரும் பிரச்சனைகள் ஆராய்ச்சிக்கு உரியனவாக உள்ளன.

அரசின் லேபர் பீரோவினால் சேகரிக்கப்பட்ட சமீபத் தகவல்களின் படி நாட்டில் 27000க்கு மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் உள இவற்றின் உறுப்பினர்கள் எண்ணிக்கை 55 லட்சத்திலிருந்து 60 லட்சம் என மதிப்பிடப்படுகிறது [1976] சந்தாவாகவும நன்கொடையாகவும் 2 கோடிக்கு மேல் வசூல் செய்யும் இவைகள் பல்வேறு நடவடிக்கைக்காக 1 7 கோடி செலவு செய்கின்றன. சமீபத்திய புள்ளி விவரப்படி 1979 நாட்டில் 2,4 96 00 சம்பந்தப்பட்ட 2336 தொழில் தகராறுகளால், 32, 2 , 8000 மனித நாட்கள் இழப்பும் 15.77 கோடி ரூபாய் நஷ்டமும், 152 69 கோடி ரூபா உற்பத்தி பாதிப்பும் ஏற்பட்டுள்ளன என புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

இந்த அளவுக்கு வளர்ந்து வந்துள்ள தொழிற்சங்கங்கள் சமூக மாற்றத்துக்கு ஆதாரமான தொழிலாளர்களை ஓரணியில் திரட்டி சமூக மாற்றத்துக்கானபோராட்டங்களை முன்னெடுக்காமல் இன்னும் வெறும் கூலியுயர்வுப் போராட்டங்களிலே தம் காலத்தைக் கடத்துவது இவ்வியக்கங்களுக்கு குறிப்பாக இடதுசாரி இயக்கங்களுக்கு சமூக மாற்றத்தின் பாலுள்ள அக்கறை குறித்துச் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. இவ்வியக்கங்கள் இனியும் தாமதிக்காது தொழிலாளர்களை அணிதிரட்டி சமூக மாற்றத்திற்காகப் போராட முன்வர வேண்டியது அவசியமும் அவசரமும் ஆகும்.

–தொழிலாளர் கல்வி கழக வெளியீட்டிலிருந்து சுருக்கித்தந்தவர்

**ப. செல்வராஜன்**

---

## வாசகர்கள் கவனத்திற்கு.

மக்கள் மறுவாழ்வு

அனைத்து தொடர்புகளுக்கும் பின் வரும் முகவரிக்கு எழுதவும்

**மக்கள் மறுவாழ்வு**

1, தெற்கு கங்கையம்மன் கோவில் 2வது தெரு,
சென்னை-600 094

# 13

காளிமுத்து வீடு வந்து சேர்ந்த போது பிற்பகல் மூன்று மணி இருக்கும்.

"உன் அப்பா, அம்மா, தங்கச்சி பாக்கியம், கணேசன் எல்லாம் எங்கே?"

ஒரே மூச்சில் அவன் கேட்டான் எனக்கோ பெருமூச்சு தான் வந்தது.

பழைய கசப்புகளை நினைத்த எனக்கு காளிமுத்துவின் கேள்விக்கு பெருமூச்சாகத்தான் விடையாக அளிக்க முடிந்தது.

"என்ன?" என்று புருவத்தை சுழித்தான்.

"எங்க அப்பா இறந்து போயி ஒரு வருஷமாகுதுடா" என்றேன.

"என்ன இறந்து போயிட்டாரா. நல்லா இருந்தாரே"



என்று அதிர்ச்சியோடு கேட்டான்.

"ஆமாம் எல்லாம் இந்த நாட்டிக்கு வந்ததன் பலன். அதுலேயும் இந்த ஊருக்கு நங்கள் வந்திருக்கக் கூடாது' என்று சொல்லிவிட்டு, என் அப்பாவின் மறைவு பற்றியும், நாங்கள் பட்ட அனுபவங்களையும் சொன்னேன். என் மாமாவை நம்பி வந்து மோசம் போனதையும் சொன்னேன்.

அவன் வந்த போது வீட்டில் யாரும் இல்லை கணேசன் யாருடைய வயலிலோ வேலை என்று போய் விட்டான். பாக்கியமும் களை வெட்ட போயிருந்தாள். அம்மா எங்கேயோ போயிருந்தாள்.

காளிமுத்துவைப் பார்த்ததும் எல்லாம் மறந்து போய் விட்டது. மாறி மாறி எங்கள் அனுபவங்களை பகிர்ந்துக் கொண்டிருந்ததில் வந்தவனை உபசரிக்கக் கூட மறந்துவிட்டேன்

"சரி வா போய் தேத்தண்ணி ஏதாவது குடிச்சிட்டு வரலாம்"

வீட்டுக்கு வந்திருந்த அவன்தான் எனக்கு ஞாபகப் படுத்த வேண்டியதாயிற்று.

"அடாடா நீ வந்ததில் அதைக் கூட கேட்க மறந்துட்டன் வீட்டுல யாருமில்ல.

"இப்போதைக்கு டீ கடை தான்" என்று நான் அவனை அழைத்துக் கொண்டு போனேன்.

டீ கடைக்கு போய் திரும்பியபோது வீட்டில் அம்மா வந்து விட்டாள்.

காளி முத்தைப் பார்த்ததும் வாயைக் சேலையால் பொத்திக் கொண்டு 'கோ' வென்று அழத் தொடங்கினாள்.

அப்பாவின் இறப்பை நினைத்து அழுதாள். வீட்டில் யாராவது மறைந்ததற்கு பின்னால் வேண்டியவர் முதல் முதல் வந்தால் அழுவதுண்டு, அவனும் அப்போதுதான் வந்திருந்தான் இலங்கையில் ஒரே தோட்டத்தில் வாழ்ந்து பிரிந்த அவனையும் வேண்டியவனாக கருதி அவள் அழுதாள்.

அவள் அழ ஆரம்பித்ததும் யாருக்கும் ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை அந்த அழுகை என் நெஞ்சையும் அடைப்பது போல இருந்தது

கொஞ்ச நேரத்தில், "சரிங்க அம்மா. கவலைப்படாதிங்க; எல்லாருக்கும் வர்றது வந்து தான் தீரும் யாரால தடுக்க முடியுப? நீங்க அழுதா பிள்ளைகள எல்லாம் தேத்தறது யாரு கவலைப்படாதிங்க" என்று காளிமுத்து அவளை தேற்றினான்

பொழுது சாய்கிற வேளையில் பாக்கியம் வீடு திரும்பினாள்.

அவள் காளி முத்துவைக் கண்டதும் "அண்ணே வாங்க எப்ப வந்தீங்க? பாத்தீங்களா? இந்த ஊருக்கு வந்து எப்பிடி கஷ்டப்படுறோ மூனு" என்று அவன் வந்ததைப் பார்த்து மகிழ்ந்ததோடு, துயரப்பட்டதும் இன்னும் நினைவில் நிற்கிறது.

'பாவம் எப்பிடி இருந்தாள் இங்க வந்து இந்த வெயிலில் காட்டுக்கு களை வெட்டவும், கதிர் அறுக்கவும் போய் எவ்வளவு மெலிஞ்சு கருத்துப் போயிட்டா' என்று அவளை பார்த்து பச்சாதாபமும் பட்டேன்.

"இவளுக்கு ஒரு கல்யாண காட்சிய பார்த்துட்டி அவரு கண்ண மூடி இருக்கலாம். அதுக்குள்ள இந்த கடவுளுக்கு பொறுக்கல்ல இவளை எப்பிடி கரை சேக்கப்போறேனோ தெரியல்ல"

நான் நினைத்த போதே அம்மாவும் அவளைப் பற்றிச் சொன்னாள்

"கவலைப்படாதீங்க! நடக்க வேண்டிய நேரத்தில் எல்லாம் நல்லபடியா நடக்கும்மா" என்று சொன்னவன் என்னிடம் கூறினான்

"சுந்தர் உங்க சொந்தக்காரங்க கூட நீலகிரில ரெண்டு மூனு குடும்பம் இருக்குது அங்கக் கூட பாத்து உன் தங்கச்சிய கட்டிக் கொடுத்துடலாமே இங்க ஒன்னும் முடியாது இந்த ஊருல்ல இருக்கிறவங்கள்ள பாத்து கட்டிக் கொடுத்தாலும் கஷ்டம் தான் படும். இந்த தொழில், பழக்க வழக்கங்களுக்கெல்லாம் ஈடு கொடுக்க முடியாது."

அவனுடைய இந்த யோசனை எனக்கு சரி என்றே பட்டது.

"அப்பிடி இருந்தா பாருப்பா காலாகாலத்தில முடிச்சுடலாம். நெருப்ப மடியில கட்டிக்கிட்டு இறக்கிற மாதிரி இருக்குது. சிலோன் மாப்பிள்ளையா இருந்தா ரொம்பவும் நல்லதாபோயிடும்" என்றும் அம்மாவும் சொன்னாள்.

எனக்கே ஆச்சரியமாக இருந்தது. கூடப்பிறந்த அண்ணன் இருக்கிறார். அப்பாவின் கூடப்பிறந்தவர்களும் இருக்கிறார்கள் மாமன், மச்சான், பங்காளிகள் என்றும் நெருங்கிய சொந்தம் பந்தங்களும், உறவினர்களும் அந்த ஊரிலே ஐம்பது, அறுபது குடிகள் இருப்பார்கள். இந்த உறவுகளை எண்ணித்தான் அம்மா இந்த ஊருக்கே வர ஆசைப் பட்டாள் அவளா இப்படி பேசுகிறாள் என்று எண்ணினேன். அன்போ, அனுசரணையோ, ஆதரவோ, நேர்மைக் கூட இல்லாத இடத்தில் தன் பெண்ணைக் கட்டி வைக்க ஆசையே அற்றுப் போய்விட்டது. அந்த மண்ணில் சொந்த சுகதுக்கங்களில் எல்லாம் பங்கு கொண்டு கூடவே வாழ்ந்து பிரிந்து போன உறவினர்களோடு மீண்டும் உறவு வைக்க மனம் ஆசை பட்டது.

எனக்கும் அதே ஆசை தான் எழுந்தது.

காளிமுத்தின் வருகை எங்கள் வீட்டில் அத்தனை பேருக்குமே ஆறுதலாக இருந்தது. இரண்டு மூன்று நாட்கள் தங்கி இருந்து விட்டு புறப்பட்டான்.

புறப்பட்டபோது என்னையும் நீலகிரி வருமாறு அழைத்தான்

எனக்கு மலைப்பாக இருந்தது

"அடே அப்பா நீலகிரி போய் வரதுனா நூறு ரூபாயாவது போகுமே" என்றேன்.

அவனோ "அகப்பத்தி நீ ஏன் கவலைப்படுற? நான் பாத்துக்கிறேன்" என்றான்.

"அதுக்கில்ல வயலுலயும் கொஞ்சம் வேலை இருக்குது இந்த நேரம் நான் வந்துட்டா எல்லாம் வீணாபிடும்" என்று பதிலளித்தேன்.

அவனும், 'சரி அப்பிடினு எல்லாத்தையும் முடிச்சிட்டு

[8-ம் பக்கம் பார்க்க]

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

தவறாம வா. எல்லாத்தையும் பாத்துக்கலாம்'' என்று கூறி விட்டு புறப்பட்டான்.

ஒரு மாதம் உருண்டோடியது. நான் வயலில் எல்லா வேலைகளையும் முடித்து விட்டு நீலகிரி போனேன்.

பாதை தவறிப்போய் இலங்கைக்கு – நாங்கள் வாழ்ந்த அந்த நுவரெலியாவிற்கே போய் விட்டோமோ என்று பிரமைதட்டியது அந்த ஊர் மாதிரியே இதுவும் இருந்தது ஊர் மட்டுமா இங்கு வாழ்க்கை தொழில் எல்லாம் அப்படியே இருந்தது.

இலங்கையிலிருந்து வந்தவர்களில் ரொம்பப்பேர் இங்குதான் குடியேறியிருந்தார்கள் வேண்டியவர்கள், தெரிந்தவர்கள், கூட வாழ்ந்தவர்கள் என்று பலர் இங்கேதான் இருந்தார்கள்.

என் தங்கையை இங்கே கட்டிக் கொடுக்க மட்டும் யோசிக்கவில்லை; குடும்பமே இங்கு குடியேறிவிடுவதென தீர்மானித்தோம்

விவசாயத்தின் பலன் திருப்திகரமாக இருக்கவில்லை. வரவுக்கும் செலவுக்கும் கட்டி வந்திருந்தால் கூட பரவா இல்லை கையைத்தான் கடித்தது. கொண்டு வந்த பணம் போனதோடு, அம்மா, தங்கை பாக்கியம் எழுத்து, சாதிவிருந்த நகை எல்லாம் வட்டிக்கடைக்கு போவதை தடுக்க முடியவில்லை இப்படியே போனால்? இது எங்கள் நம்பிக்கையை குழித்தோண்டிப்புதைக்க முனைந்துக்கொண்டிருந்தது

ஊரை தலை முழுது விட தீர்மானித்தோம்.

நீலகிரிபோய்வந்த இரண்டு மாதத்தில் நிலம், வீடு எல்லாவற்றையும் விற்று விட்டோம் அவசரத்தில் கிடைத்த விலை திருப்தி இல்லா விட்டாலும் கிடைத்தவரை சரி என்று ஊரை விட்டுப்புறப்பட்டால் போதும் என்ற எண்ணம் தான்.

அப்போதும் என்மாமாகம்மா இருக்க வில்லை.

''எல்லாத்தையும் வித்துட்டான்- இங்கேயே வாழ முடியல்ல, அங்க போயிதான் கிழிக்கப் போரானு? கெட்டுக்குட்டி சுவராத்தான் போகப் போராங்க'' என்று கருவிக் கொட்டவும் செய்தார்.

அம்மாவுக்கு அது சங்கடமாக இருந்தது. போகிறவேளையிலாவது நல்ல வார்த்தவரக் கூடாதா என்று.

'அட விடும்மா? உன் அண்ணன் பெரியதருமவான் சொன்னதுமே பலிக்கிடப்போவுது'' என்று அம்மாவை சமாதானமும் படுத்தினேன்.

நீலகிரியில் கூடலூரில் குடியேறினோம். கொண்டு வந்த பணத்துக்கு ஒரு நிலம வாங்கினோம் அதிலே கொஞ்சம் காப்பி, பலா முதலான சில பழ மரங்கள் இருந்தன. நாங்களே ஒரு வீட்டைக் கட்டிக் கொண்டோம். சின்னதாக, கூரைவேய்ந்த வீடாக,

அதிலே எங்களின் இன்னொரு வாழ்வு ஆரம்பமானது அந்த புது வாழ்வு நம்பிக்கையோடு தொடங்கினோம்.

## [5]

இரண்டரை வருடங்களுக்கு முன்னாலே இந்த கடல் கரைக்கு இதே இடத்திற்கு வந்தது இன்னமும் நினைவில் நிற்கிறது

அன்றைக்கு இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு காலடி எடுத்து வைத்தபோது வந்தது.

அந்த வேளையில், பிறந்து வளர்ந்த மண்ணை விட்டு வந்து விட்டோமே, நமக்கென்று பழக்கப்பட்டு வந்த வாழ்க்கையைத் துறந்து வந்து விட்டாமே, அந்த வாழ்க்கையில் எதிர்ப்பட்ட சுகத்துக்கங்களிலெல்லாம் பங்கு கொண்ட நண்பர்கள். உறவினர்கள், இன்னும் மற்றவர்கள் அத்தனை பேரையும் விட்டு வந்த விட்டோமே என்கிற கவலையும், 'தாயகத்'த்திற்கு வந்து விட்டோம், எப்போது வருவோம் என்றுதுடித்துக்கொண்டிருந்த-கனவு கண்டு கொண்டிருந்ததமிழ் நாட்டுக்கு வந்துடோம் என்ற மகிழச்சியும் கலந்திருந்தன.

வாழப் போகும் சொந்த ஊர் எப்படி இருக்கும், அங்கே யார் யார் இருக்கிறார்கள் எப்படி வாழ்க்கை அமையும் என்ன செய்வது, என்ன செய்யவேண்டும் என்ற கவலையும் கற்பனைகளும், திட்டங்களும் மனதில் நிறைத்தும் வழிந்தன.

இரண்டரை வருடங்களுக்கு பின்னர் இரண்டாவது முறையாக இங்கு வந்தபோதுதான் எத்தனை மாற்றங்கள்? அந்த கனவுகள் கற்பனைகள் திட்டங்கள் எல்லாம் நிறைவேறுமலே தவிடுப் பொடியாகிப் போய் விட்டன. அதற்கு பதினாக எதிர்பாராத துன்பங்களையும் துயரங்களையும், தோழ்விகளையும், ஏமாற்றங்களையுமே சந்தித்து சந்தித்து ஏற்ற அனுபவத் தழும்புகள் மட்டுமே நெஞ்சில் பதிந்திருந்தது-அந்த அனுபவ உணர்வுகள் மட்டுமே இப்போது நெஞ்சத்தில் நிறைந்திருந்தது.

மண்டப முகாமில்-'தாயகம் திரும்பியோர் வரவேற்பு முகாமில் இலங்கையிலிருந்து வந்தவர்களின் குடும்பங்கள் தங்கி இருந்தார்கள் மறுவாழ்வுத்திட்டங்களின் கீழ் அரசின் உதவிகளுக்காகத் காத்திருந்தார்கள்

அவர்களை பார்க்க எனக்கு பரிதாபமாக இருந்தது ''இவர்கள் எல்லாம் ஏன் தான் இங்கு வர வேண்டும்'' என்று-இந்தியாவுக்கு வருகிற போது எனக்கு இந்த உணர்வு இருக்கவில்லை, அவர்களைப் பார்த்து அனுதாபமும் படவில்லை— நானும் அவர்களில் ஒருவனாக இருந்தேன்.

இப்போது அவர்களை என்னால் வித்தியாசமாகத்தான் பார்க்க முடிந்தது.

அந்த தேயிலைத்தோட்டங்களிலும், ரப்பர் தோட்டங்களிலும் எவ்வளவு காலம் உழைத்தார்கள் அவையே அவர்களின் உலகமாக இருந்தது – அவர்களது உழைப்தள் தான் அந்த மண்ணே வாழ்ந்தது என்று சொல்லவேண்டும் ஆனாலும் அவர்கள் உழைப்பில் உருஞ்சியவர்கள் அவர்களுக்கு உரிமையைக் கொடுக்கவில்லை. வாழும் உரிமையைப் பறித்துக் கொண்டு விரட்டுகிறார்கள்.

எல்லாவற்றையும் இழந்து அவர்கள் இங்கே எத்துணை நம்பிக்கையோடு வருகிறார்கள் 'தாயகம்' என்று தமது பூர்வீக மண்ணென்று அவர்கள் எவ்வளவு ஆசைகளையும், கனவுகளையும் சுமந்துக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

அவர்கள் சில நாட்களில் சில வாரங்களில். சில மாதங்களில் தமதுசொந்த ஊருக்கோ, தமிழகத்தின் எங்காவது ஒரு இடத்துக்கோ பிற மாநிலங்களுக்கு கூட போய் விடுவார்கள்.

தமது இந்த மண்ணில் அடைக்கலம் போகும் புது வாழ்வுக்காக- நல்வாழ்வுக்காக அரசின் உதவிகளையும் சலுகைகளையும் பெற காத்திருக்கிறார்கள் அவைதான் இவர்கள் வாழ்வை மலர வைத்து விடப் போகிறதா என்ன?

அந்தகடலின் அலைகளைப் போல அவர்களது நினைவுகளே மனதில் மீண்டும் மீண்டும் வந்து மோதியது.

(அடுத்த இதழில் முடியும்)

மக்கள் மறு வாழ்வு

சந்தா விபரம்

வருட சந்தா ரூ. 10

தனிப்பிரதி 75 காசு

விபரங்கட்கு:

மக்கள் மறுவாழ்வு

1, தெற்கு கங்கையம்மன்
கோவில் முதல் தெரு,
சென்னை-600094

# நாட்டுப்பாடல்கள் விரவிய இலங்கை மலையகத் தமிழர் கதை....

டி.எஸ்.ராஜு

''ஊருக்கு போங்க மச்சான்
உள்ள தெல்லாம் தாங்க
மச்சான்
பாவிமகன் கப்பலிலே– நீங்க
பத்திரமாய்போங்க மச்சான்'

தன் அன்பிற்குரியவள் கடல் கடந்து அன்னிய தேசத்திற்கு போவதென்றால் ஒரு பெண்ணுக்கு மகிழ்ச்சியா யென்ன? பிரிவு துயரத்தால் மனம் வருந்தித்தானே வழியனுப்பி வைப்பாள்

'சிரிக்க நல்ல பல்வரிசை-
மச்சான்
செந்தூர பொட்டழகன்
முறுக்கு மீசை படர்ந்திருக்க
அவர்
முந்திவிட்டார் கப்பலிலே'

∴ ∴ ∴

'வண்டி விறகிருக்க -- நல்ல
வயல் விளைஞ்ச நெல்லிருக்க
தின்னிருக்க மாட்டாமே-
பர்மா
தேசம் வழி சென்றுரே'

∴ ∴ ∴

'படுத்தால்பலநினைவு.ஓலைப்
பாய் திரையுங் கண்ணீரு
உறங்கச் சடவினிலே-நான்
உலுப்பிவிட்டேன் கண்ணீர

.................................................

வறுமை மாத்திரம் அல்லாது பலமான வாழ்க்கை வாழ்ந்திருந்தும் கூட சிலர் மேலும் பொருளீட்ட வேண்டு மென்ற ஆசையிலும் அன்னிய சீமைகளுக்குச் சென்றுர்கள்.

∴ ∴ ∴

வங்காளம் போரேயென்று
மனக்கவலை வையாதேடி
-உன்
சிங்கார கொண்டைக்கு
நான்
சீப்பு வாங்கி வாரேனடி

கடல் கடந்து போகும்போது- ஆறுதல் கூறிப்போகும் காட்சிகள் எத்தனை.

∴ ∴ ∴

''ஒன்னை விட்டு
போரோமுனு
துயரங்களை வைக்காதேடி
காலம் திரும்பையிலே-நான்
கட்டாயம் வந்திடுவேன்

இன்னொரு பிரிவுக் காட்சியை இப்படி சித்தரிக்கிறது

∴ ∴ ∴

ஆள் கட்டும் பெரியக் கங்காணிமார்கள் தஞ்சாவூர் முதல் சேலம் வரை–மதுரை திருச்சி, இராமநாதபுரம் முதலான பல 'ஜில்லா'களிலிருந்து இலங்கையில் (முதலில் இலங்கையில் பாலம், பாதைகள் அமைக்கும் பயனியர்களாகவும் பின்னர் தோட்டங்களில் கூலிகளாகவும்கோப்பித்தோட்டங்களிலும்)தேயிலைத் தோட்டங்களிலும் கூலிக்கு வேலை செய்வதற்காகத் தொழிலாளர்களைத் திரட்டினுர்கள்.

மானத்திலே மழையுமில்லை
மழைப் பொழியக்
காணவில்லை
மூட்டை அனைத் தூக்குங்கடி
முன்னையாறு போய்ச்சேர

∴ ∴ ∴

''மானத்திலேமேகம்இல்லை
மழைப்பொழியநாலுமில்லை
கூடவந்து சேந்தியினு
குடி மங்கலம்விடியப்போவம்

∴ ∴ ∴

''மானத்திலே
மழையுமில்லை
மழைப்பொழியகாண
வில்லை
கூடிமாடிப் பேசுங்கடி–நாம்
கொழும்பு சீமைப் போய்
பிழைப் போம்''

மழையில்லாது ஏற்பட்ட வரட்சியின் காரணமாக ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்கு அதாவது தமிழ் நாட்டிற்குள்ளேயே செழிப்பாயிருந்த ஊருக்குப் போய் பிழைப்பைத் தேடியது மாத்திரமல்ல கடல் கடந்து இலங்கைக்குச் சென்றுர்கள், பர்மாவுக்குச் சென்றுர்கள் மலேயாவுக்குச் சென்றுர்கள் சில ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கின்ற மொரிஸ்ஸிஸ் தீவுகளுக்கும், தென்னுபிரிக்க ரப்பர் தோட்டங்களுக்கும், பீஜித் தீவுகளின் கரும்பு தோட்டங்களுக்கும் செல்லத் தொடங்கினுர்கள்.

வண்டி அலையலையாய்
வண்டிக் காரன் சிண்டலை
யாய்
புள்ளக் குட்டி காரனடி
போரான்டீ ரங்கூனுக்கு

## [3]

பிழைப்பிற்காக தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக் வந்த மக்கள் கப்பல் மார்க்கமாக வந்தார்கள். ஆனுல் 1914ம் மூன்னுல் சிறுவள்ளங்கள் மூலமாகவே கடலைக் கடந்து வந்தார்கள் வள்ளங்கள் ஏதுவுமின்றி நீர் நிறைந்த மண்திட்டுக்களாக இப்போது இருந்த ''ராமர் அணை''யை கால் நடையாகவும் நடந்து கடந்து வந்ததாக தொண்டுக் கிழவர்கள் இன்றும் சொல்லக் கேள்வி.

இலங்கையை நோக்கி வந்தவர்கள், தொண்டிதுறைமுக கரையிலிருந்துதான் ஏற்றப்பட்டு இலங்கைக்கு அழைத்து வரப்பட்டார்கள்

வங்காளம் கொங்கு
மலையாளம்
டில்லி யாழ்ப்பாணம் கண்டி
கொழும்பு சீமை
மங்கலம் போயி தொடி
தொடிச்சி
வந்து நிற்குமாம் தொண்டி
கப்ப''

இலங்கைக்குப் புறப்பட்டவர் என்றுமே கடலைப்பார்த்தவர்களல்ல, கப்பலைக் கண்டவர்களல்ல, இலங்கைக்குக் கப்பல் ஏறுவதற்காக தொண்டிக்கரையைச் சேர்ந்தவர்களுக்கு வெளிநாடுகளிலிருந்து கப்பல்கள் வந்து நிற்பதைப் பார்ப்பதற்கு வியப்பாக இருந்தது.

தொண்டி இருகரை பொங்கி
வருகையிலே
ரெண்டு ஜோடிகள்மட்டங்க
நிற்கையிலே
மேகங்கள் ஓடிப் பொழுதை
மறைக்க

கப்பல் ஏறிப் போவதற்காக அங்கே குடும்பமாக வந்து நிற்கிருர்கள். ஜோடியாக வந்து நிற்கிருர்கள். தனியாகவும் நிற்கின்றுர்கள் கூட்டமாகக் குழுமி நிற்கிருர்கள். என்றுமே கப்பலைப் பார்த்திராதவர்களுக்கு கப்பல்கள் வந்து நிற்பது அதிசயமாக இருக்கிறது

இவ்வாறு வந்து நிற்கும் கப்பல்களில் ஏறி இலங்கைக் கரையை அடைகிருர்கள்.

தொண்டி கப்பல்களிலும் [கப்பல் போக்குவரத்துஆரம்பமாவதற்கு முன்னுல் இலங்கை இந்திய அரசுகளின் ஒப்பந்தத்தின் மூலம் 1914ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட'' இஸ்ட்ரீம்போட் போக்குவரத்திற்கு முன்னுல்] சிறு சிறு வள்ளங்கள் மூலமும் இலங்கைக் கரையை அடைந்தார்கள்.

''வாடையடிக்குதடி
வடக்காத்து வீசுதடி
சென்னல் அடிக்குதடி–நாம
சேர்ந்துவந்த கப்பலிலே'

கப்பல்களிலே கடலைக் கடந்து வந்தபோது படாதப் பாடுபட்டவர்கள் காற்று மழை கடும் புயலையெல்லாம் எதிர்த்து கரை வந்தடைந்தார்கள்.

(தொடரும்)

# எங்கெங்கும் அந்நியமாக்கப்பட்டவர்கள்

## வரப் பெற்றோம்

964-1974 ஆண்டுகளில் ஸ்ரீமாவோ சாஸ்திரி ஒப்பந்தம், ஸ்ரீமாவோ-இந்திரா ஒப்பந்தத்தின் மூலம் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு குடிபெயர்ந்துவரும் மக்கள் மத்தியில்நடைபெற்ற ஒருஆய்வே இந்தநூல்.

நீண்ட காலம் இலங்கையில்-(இந்தியாவிலும் எழுத்துப் பணியிலும் சமூகப்பணியிலும் ஈடுபட்டுள்ள எஸ் பன்னீர் செல்வம், பி.எஸ்.நாதன், ஏ. சிவானந்தன், டி எஸ் ராஜு மற்றும் சிவா சாந்தகுமார், உருசுலா நாதர், குணசீலி, அந்தோனியம்மாள் ஆகியோரின் ஆய்வின் தொகுப்பே இந்த நூல்

இலங்கையிலிருந்து குடிபெயரும் மக்கள் இந்தியாவில் தங்கள் புதுவாழ்வை தொடங்குகிறார்கள். தமதுசுயமுயற்சிலும், அரசின் மறுவாழ்வு உதவிகள் மூலமும் தமது மறுவாழ்வை அமைத்துக் கொண்டு வருகிறார்கள்.

ஃ இங்கு குடியேறும் மக்கள், காலநிலை, வறுமை, வேலையின்மைபோன்றவரால் எவ்வாறு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக அவர்களது மனோ நிலை பாதிப்புகளை இந்த ஆய்வு நூல் சித்தரிக்கிறது.

ஃ தமது சொந்த விருப்பத்திற்கு மாறாக இருநாட்டு அரசாங்கங்களும் செய்துக் கொண்ட ஒப்பந்தங்கள் சட்டத்திட்டங்களாலும் இலங்கை அரசாங்கத்தின் இன அடக்குமுறையிலும் பாதிக்கப் பட்டு இந்தியா வந்தவர்கள் பற்றிய கணப்பீடு இதில் இடம் பெறுகிறது.

ஃ இந்தமக்கள் பூர்வீககிராமங்களிலும், பிறபகுதிகளிலும் குடியமர்ந்த குடியமர்த்தப்பட்டபோது அவர்கள் மூகம் கொடுத்துள்ள கலாச்சாரம், ஜாதி, பழக்க வழக்கங்கள் அவர்களை எவ்வாறு பாதித்துள்ளது என்பதை பற்றி விவரிக்கிறது.

ஃ இந்தியா திரும்பியுள்ள இந்த மக்கள் இந்திய மக்களுடன் எவ்விதம் தங்களை இணைத்துக் கொண்டிருக்கிறார்கள்; தங்களின் இணைவு உணர்வை எவ்வாறு வெளிப்படுத்துகிறார்கள் என்பதையும் இந்நூல் காட்டுகின்றது.

இம்மக்களின் வாழ்வு குறித்தும், அவர்களுக்கு வழங்கப்படும் மறுவாழ்வு குறித்தும் பல நூல்கள் வெளிவந்துள்ளன இந்தியாவிலிருந்து பலர் பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதியிருக்கின்றனர் பல சமூக சேவா நிறுவனங்கள் ஆய்வுகளை மேற் கொண்டன இவற்றுள்ள பெரும்பாலான ஆய்வுகள் வெறும் புள்ளி விபரங்களை மட்டுமே முன்வைத்தன அவை இம்மக்களின் பாதிப்புகள் குறித்து வெளிப்படுத்த தவறிவிட்டன ஆக அவை இம்மக்களின் 'இதயங்களை' புலப் படுத்தவில்லை.

அவற்றிற்கெல்லாம் ஒரு முன்மாதிரியான — வித்தியாசமானது இந்த ஆய்வு.

மறுவாழ்வுத் திட்டத்தின் மூலமும் தமது சொந்த விருப்பத்தின்படியும் இங்கு திருப்பியவர்கள் பல்வேறு துன்ப துயரங்களுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் இம்மண்ணுக்கு திரும்பியதால் இவர்களது வாழ்வு உயர்ந்துவிடவில்லை. மாறாக அவர்களின் குடும்பங்களும் வாழ்வும் சிதைந்தே போயிற்று. மலையக தமிழ் தேசிய இன மக்களின் பிரச்சனை இந்தியா திரும்புவதால் தீர்ந்து விடப் போகிற ஒன்றல்ல.

அவ்வாறெனில் இந்த மலையக மக்களின் பிரச்சனைகளுக்கான தீர்வு என்ன என்ற கேள்வி எழுப்பி இருப்பதோடு அது தனது தீர்வுகளையும் வைத்துள்ளது.

அதன் ஒரு கூறாக இன்று அங்கு இருக்கும் மலையக மக்களின் சிக்கல்களையும் எடுத்து வைத்துள்ளது அச்சிக்கல்களுக்கான தீர்வு இலங்கையின் மொத்த தேசிய இன சிக்கலை தீர்க்கும் இயக்கப் போக்குடன் சம்மந்தப்பட்டுள்ளது என்பதை விளக்குவதோடு இச்சிக்கலுக்கான தீர்வினையும் வைத்துள்ளது

ஃ ஒன்று இலங்கை ஒரு பல்தேசிய இனங்களின் ஜனநாயக குடியரசாக (சரியான அர்த்தத்தில்) மாற்றப் படவேண்டும் மற்றது அடக்கி ஒடுககப்பட்ட பூர்வீக தமிழ் தேசிய இனமக்கள் முஸ்லீம் மக்கள், மலையக தமிழ் மக்கள் அனைவரும் தங்களுக்கென ஓர் அரசை உருவாக்க வேண்டும் என்பவையே இத் தீர்வு—

பெங்களூர் இந்திய சமூக நிறுவன இயக்குனர் ஸ்டான் லூர்துசாமி, சிராக் செபஸ்டியன் ஆகியோரின் ஆலோசனையுடன் சிறப்புற வெளிவந்திருக்கும் இந்த நூல் இலங்கையிலிருந்து இந்திய திரும்பிக் கொண்டிருக்கும் மக்கள் பிரச்சனை தெளிவுறுத்தும் பயனுள்ள ஆய்வாகும்.

கிடைக்குமிடம் :

'சிராக்'
19 6-பி 7-வது தெரு,
அனந்தகிரி
கொடைக்கானல்-624102.

O

(1)

**Sinhala youth Cautions Sri Lanka Government**

(2)

**Zionism- Welcome To Sri Lanka**

By

B A. AJANTHA

Published by
Tamil Information Centre
9, Narayanan Street,
Madaras 600 024.

---

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

தல், மின் வசதி பெறுதல் இரண்டிற்கும் தொடர்புடைய அரசு அதிகாரிகளுக்கு தெரியப்படுத்துவதற்காக ஏற்றுக் கொள்ளப்பட்டது கோவில்கட்டுவதற்கு காலனி தொழிலாளர்களும் தங்கள் பங்கை செலுத்தினால் தாமும் தமது பங்கை செலுத்தி பூர்த்தி செய்ய, இயக்குநர் எம் ஆர். லிங்கம் தன்னாலான உதவியை தனிப்பட்ட முறையில் செய்வதற்கு ஒப்புக் கொண்டார்

தஞ்சை திருச்சி நண்பர்கள் தந்த ஒத்துழைப்புடன் குழுவினர் சென்னை திரும்பும் வழியில் எரையூர் சர்க்கரை ஆலைக்கு சென்று அங்குள்ள தாயகம் திரும்பியோர் குடியிருப்புகளின் குறைகளைக் கேட்டுத் தெரிந்து கொண்டனர்

எரையூர் சர்க்கரை ஆலை தொழிற்சங்க செயலாளர் திரு பாலகிருஷ்ணன்மற்றும் காலனி தலைவர் ஆகியோர் சிறப்பான ஒத்துழைப்புத்தந்தனர் எரையூர் சர்க்கரை ஆலை தாயகம் திரும்பிய தொழிலாளர்களின் தேவைகளை மறுவாழ்வு துறைக்கு தெரிவிக்க ஆவன செய்ய ஏற்றுக் கொண்டு சென்னை திரும்பினர்.

## உன்னும் ....

(4-ம் பக்கம் தொடர்ச்சி)

செய்யவில்லை என்று தெரிவித்தார்கள்.

அவர்கள் குடியிருப்பதற்கு தற்காலிக குடிசை அமைத்துக் கொடுக்கப் பட்டிருக்கிறது. இதுவரை எந்தத் தொழிலும் இல்லை. வருமானமும் இல்லை. ஒரே ஒருமாதம் மட்டும் நிவாரணத்தொகையாகபணம் (பெரியவர்கள் மூவரும் குழந்தை ஒன்றும் உள்ள குடும்பத்திற்கு ரூபா 242·20 காசு வழங்க பட்டிருக்கிறது) வழங்கியிருக்கிறார்கள்.

வேறு வேலையும் கிடைப்பது அரிதாக இருக்கிறது என தெரிவிக்கிறார்கள், தாங்கள் இருக்கும் கிராமம், மற்றும் சுற்று கிராமங்களில் வேலை கிடைப்பதில்லையாம் உள்ளூரில் உள்ளவர்களுக்கே வேலை கொடுக்கிறார்களாம். மற்றவர்களுக்கு வேலை வழங்குவதில்லை என்றும் இதனால் தாங்கள் இங்கு வேலை தேடி செல்வதே பெரும் பாடாக இருக்கிறதென்கின்றனர்.

தண்ணீர் வசதி மிகவும் முக்கிய பிரச்சனையாக இருக்கிறது என்றனர். பக்கத்திலுள்ள வயல்களிலோ. கேணியிலோ யாரும் தண்ணீர் எடுக்க விடுவதில்லையாம். திருச்செங்கோடு நகரசபை ஆரம்பத்தில் குடி தண்ணீர் கொடுத்ததாம் இப்போது அதுவும் ஒழுங்காக கிடைப்பதில்லை என்று தெரிவிக்கிறார்கள்.

"நாங்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வரும் போதெல்லாம் எங்கள் குறையை சொல்கிறோம் உடன் தொழில் செய்யும் வாய்ப்புக்கு வழி சய்ய கேட்கிறோம் இது இல்லாவிட்டால் மாற்று வேலை கூட தரும்படி கேட்டும் விட்டோம். கேட்கும் போதெல்லாம் நீங்கள் மாடுதான் வளர்க்க வேண்டும் அதுதான் உங்கள் தலையெழுத்து என்கிறார்கள் ஆனால் அதற்கு கூட வழிதான் பிறக்கவில்லை" என்று வேதனையோடு குறிப்பிட்டார்கள்.

## தாயகம் திரும்பியோரை தவிர்க்க வைப்பதா ?

"கண்டியில் பால்பண்ணையில் வேலை இருக்கிறது. மாதம் ரூபா 750 சம்பளம் என்றார்கள். இங்கோ நாங்களே மாடுகள் பிடித்து வளர்க்க வேண்டும் என்கிறார்கள். அதுவும் இன்னும் தொடங்கிய பாடில்லை என்று குடியமர்ந்தோர் திரும்பத் திரும்பக் கூறுகிறார்கள்.

இவர்கள் தெரிவிக்கும் கருத்திலிருந்து நமக்கு புரிவது, இந்த திட்டம் குறித்தும், இத்திட்டம் எப்படி செயல்படவிருக்கிறது என்பது குறித்தும், அதன் வளர்ச்சி. நன்மைகள் பற்றியும் எதுவுமே இவர்களுக்கு தெரிவிக்கப்படவில்லை, இன்னொரு நாட்டிலிருந்து வந்து புரியாதிருப்பவர்களுக்கு உரிய விளக்கங்கள் கொடுத்து நம்பிக்கையூட்டும் அறிவுரைகள் வழங்கப்படவில்லை என்றே தெரிகிறது

"நீங்கள் மாடு வளர்க்கத்தான் வந்திருக்கிறீர்கள் அதுதான் தலையெழுத்து" என்று கூறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அலட்சியமும், அசிரத்தையும் தாயகம் திரும்பியோர்களை அவநம்பிக்கைக்குள்ளாக்குகிறது

அதற்கேற்ப, சம்பந்தப்பட்ட திட்டமும் ஆரம்பிக்கப்படும் அறிகுறியே தெரிவில்லை என்கின்றனர் இன்னமும் உரிய இடம் கூட தேர்ந்தெடுக்கப் படவில்லையாம், இது குறித்து ஒரு சமூக நல அமைப்பொன்றின் பிரமுகர் கருத்து தெரிவிக்கையில், திட்டம் தீட்டப் பட்டு விட்டது, அது எங்கு, எந்த ஊர் என்றும் தீர்மானிக்கப்பட்டு விட்டது. அப்படியிருக்க, அவர்கள் முகாமிலிருந்து வருவதற்கு முன்னமே எந்த இடத்தில் குடியமர்த்தலாம், பண்ணைத் திட்டத்தை ஆரம்பிக்கலாம் என்று தீர்மானித்து அவர்களை குடியமர்த்த வேண்டாமா? ஏன் இந்த அலைகழிப்பு? இரட்டிப்பு வேலை? அதன் மூலம் திட்டத்தை செயல்படுத்தி தாயகம் திரும்பியோர்களை குடியமர்த்துவதில் எவ்வளவு காலதாமதம் ஏற்படுகிறது அதற்குள் தாயகம் திரும்பியோரும் ஏதும் வழி இல்லாதவர்களாக பிச்சை எடுக்கும் நிலைக்கு வருவதோடு வேறு இடங்களுக்கும் போய்விடுகிறார்கள், திட்டங்களும் ஏட்டளவில் நின்று விடுகின்றன பிறகு திட்டம் 'செயல்பட முடியாதற்கு காரணம் தாயகம் திரும்பியோரே என்று குற்றம் சாட்டப்படுகிறார்கள்

## தவறான வழிகளில் சீரழிய வைப்பதா ?

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய காலத்தில் உரிய நடவடிக்கைகளை எடுத்து திட்டங்களை செயல்படுத்தாததாலும், மறு வாழ்வு உதவிகளை அளிப்பதில் உண்டாக்கும் காலத்தாமதத்தாலும், அவற்றை அளிப்பதிலுள்ள குறைப்பாடுகள், முறைகேடுகளாலுமே தாயகம் திரும்பியோர் தவறான வழிகளில் சென்று தமது வாழ்க்கையை பாழாக்கிக்கொள்கிறார்கள் என்பதை திட்டவட்டமாக கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

இவர்களை சுற்றி இருப்பவர்கள் பிழையான விளக்கங்களை கொடுத்து ஏமாற்றிவிடுகிறார்கள், இடைத்தரகர்களிலும், வீடுகட்டும் கான்ட்ரக்டர் என்ற பேரால் பல சமூக விரோதிகளும் இவர்களைச் சுரண்டுகிறார்கள்.

முகாம்களில் மறுவாழ்வு உதவி, பிற வாய்ப்புக்காக காத்திருப்பவர்களையும் 'இங்கே இப்படி, அங்கே அப்படி' என்று பிழையான அறிவுரைகள் ஆலோசனைகள் வழங்குகின்றனர். இதனால் அவர்களும் தமக்கு வழங்கப்படும் எல்லா மறுவாழ்வு உதவிகளையும் பிழையானதாக கருதி ஏற்க மறுக்கின்றனர். நல்ல வாய்ப்பினைக் கூட பெற்றுக் கொண்டு போகத் தயங்குகின்றனர்.

அது மாதிரியே, பால்பண்ணைத் திட்டத்திற்கு சிபார்சு செய்யப்பட்டு வந்தவர்கள் அத் திட்டத்திற்கு செல்ல அஞ்சுவதும், தயங்குவதற்கும் காரணம் என்பதை சம்பந்தப் பட்ட அதிகாரிகள் உணர வேண்டும்.

-மோகன் குமார்

## இங்குமா இந்த துவேசம் ?

இலங்கையின் தோட்டப் பகுதிகளிலிருந்து வந்து முகாம்களில் தங்கி இருக்கும் மக்களை 'தோட்டக் காட்டான்' என்று இழிவுப்படுத்தும் பேதம் இங்கும் தொடர்கிறதாம், இப்படி இழிவுப்படுத்தி கைகலப்பு கொள்ளும் அளவிற்கு சிலர் போகிறார்களாம்.

"இலங்கையில் தான் மலைநாட்டுத் தமிழர்களை மற்ற பகுதித் தமிழர்கள் 'தோட்டக் காட்டான்' என்று இழிவு படுத்தினால், அகதிகளாக—வாழ்வை தேடிவந்த இடத்திலும் இந்த பேதத்தைக்காட்டி இழிவுபடுத்த வேண்டுமா? 'எங்கள் சொந்த மண்ணிலும் எங்களை விட்ட பாடில்லையே?" என்று திருச்சி முகாமில் தங்கி இருக்கும் தாயகம் திரும்பிய ஒருவர் தெரிவித்தார்

O

## ஆட்டோ டிரைவர்கள் அதிக கட்டண வசூல்

திருச்சி டோல்கேட், கொட்டப்பட்டு பகுதியில், இலங்கையர்-தாயகம் திரும்புவோர் என்றால் ஆட்டோ டிரைவர்கள் ரூபா 20,25 என்று கண்ணை மூடிக்கொண்டு கேட்கிறாகளாம். 4 ரூபா 5 ரூபா கட்டணத்திற்கு ரூபா 15க்கு குறையாமல் கட்டணம் அளவிடுகிறார்களாம். ஆட்டோ பிரயாணம் செய்யும் இவர்கள் கேட்ட தொகை கொடுத்து விட்டுத்தான் இறங்க வேண்டுமாம்? இல்லாவிட்டல் அவர்களிடம் கை கலப்புதானும். போக்குவரத்து காவலர்கள் இதை தடுப்பார்களா?

Editor & Publisher: T.S. RAJU, Ganga amman kovil street, Madras - 600 094. Printer: L.S. Srinivasan at Jai Kalidas Press, 29, B.E. Colony, 4th Street, Madras-600 024.

[முதல் பக்கத் தொடர்ச்சி]

செய்துள்ளதால் அந்த இடங்களும் காலியாகவே உள்ளன

சென்னையில் அனைவரும் போட்டியின்றி ஏகமனதாக தெரிவாகியுள்ளனர்.

இத் தெரிவில் வங்கியில் தற்போதைய தாயகம் திரும்பியோர் இயக்குனர் திரு. எம். ஆர். லிங்கம் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. மற்றும் டெலிகேட்டு யூனியன் செயலாளர் கவிஞர் வேணுகோபாலன், தலைவர் திரு ஆ.வி. உதயணன் ஆகியோரும் தெரிவாகி இருக்கின்றனர்.

திருச்சி, மதுரை, சேலம் ஆகிய தொகுதிகளில் மட்டுமே பலத்த போட்டியில் தேர்தல் நடைபெற விருக்கிறது

சேலத்தில் 5 சார்பாளர்களுக்கு 7 பேர் போட்டியிருகின்றனர் இவர்களில் கடந்த தேர்தலில் இயக்குனருக்கு போட்டியிட்ட திரு. ஜெகநாதன் அவர்கள் போட்டியிடுகிறார்

மதுரையில் 5 சார்பாளர்களுக்கு 8 பேர் மனுதாக்கல் செய்துள்ளனர். இவர்களில் தாயகம் திரும்பியோர் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் திரு. ஏ. எம். அப்பாவு அவர்களும் போட்டியிடுகிறார்.

திருச்சியில் 17 சார்பாளர்களுக்கு 22 பேர் போட்டியிடுகின்றனர். இவர்களில் தாயகம் திரும்பிய தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொது செயலாளர் எம். ரட்னம், குடிப்பெயர்ந்தோர் மேம்பாட்டுக்கான சமூகநலச் சங்கத்தின் தலைவரும், 'மக்கள் மறுவாழ்வு ஆசிரியருமான டி. எஸ். ராஜு ஆகியோரும் போட்டியிடுகிறார்கள்.

## தூத்துக்குடி நூற்பாலை தொழிலாளர் பாத யாத்திரை: பிரச்சினை தீர்வு !

தூத்துக்குடி கூட்டுறவு நூற்பாலையில் பணிசெய்யும் தாயகம் திரும்பிய தொழிலாளர் சில கோரிக்கைகளை வைத்து தூத்துக் குடியிலிருந்து மதுரை வரை பாத யாத்திரை செய்தனர். தாயகம் திரும்பியோர் வங்கியின் மதுரை கிளை முன் உண்ணாவிரதமும் இருந்தனர்.

லே-ஆப் பிரச்சனை, சம்பள உயர்வு பிரச்சனை, வீட்டுப் பிரச்சனை இவற்றை வைத்து மேற்படி பாத யாத்திரை மேற்கொண்டனர்.

உடனடியாக வங்கியின் அதிகாரிகள் நூற்பாலை நிர்வாகத்துடன் நடத்தியதில் லே ஆப்பை தளர்த்தவும் லே-ஆப் குறையும் வகையில் மாற்று நடவடிக்கை எடுக்க நிர்வாகம் சம்மதித்தது, சம்பள பிரச்சனையில், 8வது கட்ட சம்பள உயர்வை வழங்கவும் சம்மதித்துள்ளது.

வீட்டுப் பிரச்சனையில், வீட்டுக்கடன் கொடுப்பது வீட்டுமனை வழங்குவது தொடர்பாக வங்கி சம்பந்தப் பட்ட அரசு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்ய உறுதி அளித்துள்ளது.

பேச்சு வார்த்தையைத் தொடர்ந்து நூற்பாலைத் தொழிலாளர்கள் மீண்டும் வேலைக்குத் திரும்பினர்.

## கூலி விவசாயிகள் சங்க கூட்டம்

கொடைக்கானல் சிறு விவசாய கூலி தொழிலாளர் சங்க கிளை நிர்வாக தேர்வு கூட்டம் 10-6-84 அன்று வில்பட்டி கிராம பஞ்சாயத்து அலுவலகத்தில் கொடைக்கானல் விவசாய சங்க தலைவர் திரு எஸ். விகாமாட்சி பிள்ளை அமைப்பு செயலாளர் திரு ஆர் ராஜ்குமார் தலைமையில் நடந்தன.

திரு. கே. பி. காளிமுத்து (தலைவர்) திரு. எம். தியாகராஜன் செயலர்)

நிர்வாககுழு-கே வி பிச்சை, சி ஆரோக்கியசாமி. கே மணியன் ஆகியோர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

பட்டா இல்லாதவர்களுக்கு பட்டா வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் விளையும் பொருட்களுக்கு தக்க விலைகளுக்கு விற்கவும் பஞ்சாயத்து யூனியனில் கொடுக்கும் விதை பொருட்கள், பாதிக்கப்பட்ட ஏழை விவசாயிகளுக்கு வந்து சேர்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று விவசாயிகளின் கோரிக்கையாக இருந்தன.

## நூல் வெளியீடு

எதிர் வரும் 6.8.1984 திங்கட்கிழமையன்று மாலை 6 மணிக்கு சென்னை மத்திய நூலக கட்டிடத்தில் "இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத் தனம்" என்ற நூலை ஈழம் குடிப்பெயர்ந்தோர் அமைப்புக் சங்கம் வெளியிட்டுள்ளது.

நூலை இரா. அன்பரசு எம்.பி. அவர்கள் வெளியிட தோழர் தா. பாண்டியன், முனைவர் இரா. இளவரசு, வழக்கறிஞர் செந்தில் நாதன் ஆகியோர் நூலைப்பற்றி சிறப்புரை ஆற்றுவர்.

## வட்டமேசை மாநாடு ஒத்திவைப்பு

இலங்கையில் கடந்த ஆண்டு ஜூலையில் நடந்த இனக்கலவரத்தில் உயிரிழந்தவர்கள் நினைவாக ஒரு வாரம் துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது ஆதலால் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி 23-ம் தேதி ஆரம்பித்த வட்ட மேஜை மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை

வட்டமேசை மாநாட்டில் ஜே ஆர். ஜெயவர்த்தனா தனது புதிய திட்டம் அறிக்கையை தாக்கல் செய்ததைத் தொடர்ந்து மாநாடு ஆகஸ்ட் 17 ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

Regd. No. TN/MS (C) 702

மக்கள் மறுவாழ்வு

தொடர்பு கொள்ள :

1, தெற்கு சங்கையப்பன் கோவில் 2வது தெரு
சென்னை 600094